IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 50/2022

Deposition of Witness : PW1

Name : அருணா (வயது – 48)

Father's Name /W/o : க/பெ சேகர்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : புதுகண்டிகை

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 09.09.2025.

## முதல் விசாரணை

1. நான் இந்த வழக்கின் வாதி ஆவேண். நான் பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பிரமாண பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் எனக்கு தெரியும்.

2. 01.12.2014 தேதியிட்ட வாதி மற்றும் பிரதிவாதி பெயரில் உள்ள விற்பனை ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ – 1 ஆகவும், வாதி மற்றும் பிரதிவாதி பெயரில் உள்ள கூட்டு பட்டா கணினி நகல் வா.சா.ஆ – 2 ஆகவும், அடங்கல் பதிவேடு அசல் வா.சா.ஆ – 3 ஆகவும், 07.03.2022 தேதியிட்ட கிஸ்த் ரசீது அசல் வா.சா.ஆ – 4 ஆகவும், (பிரதிவாதி வழக்கறிஞர் விற்பனை ஆவணம் மற்றும் கூட்டு பட்டா வாதி மற்றும் பிரதிவாதி பெயரில் உள்ளது பிறகு எப்படி கிஸ்த் ரசீது வாதி பெயரில் மட்டும் பெற முடியும் என்ற ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) வில்லங்க சான்று கணினி

நகல் வா.சா.ஆ – 5 ஆகவும், வாதியின் குடும்ப அட்டை நகல் வா.சா.ஆ – 6 ஆகவும், வாதியின் ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ – 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஆவணம் குறியீடு செய்தல் தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**